www.padippakam.com

# செங்கொடி செய்தி

இ.க.க. (மா.லெ) செங்கொடி மாநிலக் குழு வெளியீடு

★ இ.க.க (மா.லெ) செங்கொடியின் அனைத்திந்திய ஐந்தாவது மாநாடு வெற்றிகரமாக நடந்தது.

★ இ.க.க. (மா.லெ) செங்கொடியின் தமிழ்மாநில மூன்றாவது மாநாடு.

★ உலக வர்த்தக கழகத்தின் (WTO) பலிபீடத்தில் இந்திய விவசாயிகள்

★ புரட்சிகர இடது மாற்றைக் கட்டுவது பற்றிய பிரச்சினை
- K.N.R.

★ அனைத்திந்திய மாநாட்டில் தோழர் நீண்டபயணம் சுந்தரம் ஆற்றிய உரை.

மார்ச் 2001 விலை: ரூ. 3.00

படிப்பகம்

www.padippakam.com

# இ.க.க. (மா.லெ.) செங்கொடியின் அனைத்திந்திய ஐந்தாவது மாநாடு வெற்றிகரமாக நடந்தது

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) செங்கொடியின் அனைத்திந்திய ஐந்தாவது மாநாடு ரெய்ச்சூரில் கடந்த ஆண்டு 2000-த்தில் டிசம்பர் 26 தொடங்கி 31 முடிய நல்ல முறையில் நடந்து முடிந்தது. மாநாட்டில் பங்கு பெற்ற பல்வேறு மாநில பிரதிநிதிகள் புதிய ஆண்டின் அறை கூவல்களை எதிர்கொள்ள புரட்சிகர புத்தெழுச்சியுடன் தங்கள் பகுதிகளுக்கு திரும்பினார்கள்.

மத்திய சீரமைப்புக் கமிட்டி மாநாட்டினை சிறப்பாக நடத்தி முடிக்க ஆறு மாதங்களாக கடமை ஆற்றியது. கட்சித் திட்டம், கட்சி அமைப்பு விதிக்கான திருத்தங்கள், அரசியல் - அமைப்பு அறிக்கை போன்ற ஆவணங்கள் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சுற்றுக்கு விடப்பட்டன. கட்சி இயங்கக் கூடிய ஒவ்வொரு மாநிலமும் தனது அரசியல் - அமைப்பு அறிக்கையையும் இந்த ஆவணங்களுடன் உறுப்பினர்களின் விவாதத்திற்காக முன்வைத்தது.

பல்வேறு மாநிலங்களிலும் பகுதி, மாவட்ட, மாநில மாநாடுகள் நடைபெற்றன. ஆவணங்கள் ஆழமாக விவாதிக்கப்பட்டு, திருத்தங்கள் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. புதியக் கமிட்டிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. தமிழ் நாட்டிலும் மாநில மாநாடு நடைபெற்று மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது.

அகில இந்திய மாநாட்டினை நடத்தும் பொறுப்பை கர்நாடக மாநிலக் கமிட்டி ஏற்றிருந்தது. கர்நாடக மாநிலம் பூராவும் சுவரெழுத்துக்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் மாநாடு குறித்து சிறப்பான முறையில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. டிசம்பர் 27-ந் தேதி மாலை ரெய்ச்சூரில் மாநாட்டினை ஒட்டி ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் அகில இந்திய செயலர் தோழர் K.N. ராமச்சந்திரன் அனைத்து வாழ்க்கை துறைகளிலும் உலக மயமாக்கலும் மதவகைப்பட்ட பாசிச முயற்சியும் எவ்வாறு அச்சுறுத்தல்களாக உள்ளன என்பதையும், மாநாட்டின் முக்கியத்துவத்தையும் விளக்கி பேசினார்.

டிசம்பர் 28-ம் தேதி காலை அனைத்திந்திய ஐந்தாவது மாநாடு தோழர் K.N.R. செங்கொடியை ஏற்றி வைத்து தியாகிகளுக்கு செவ்வணக்கம் செலுத்தும் நிகழ்வுடன் தொடங்கியது. பல்வேறு மொழிகளிலும் சர்வதேசிய கீதம் இசைக்கப்பட்டது. தியாகிகளின் தியாகத்தை உணர்த்தும் பல்வேறு மொழிகளில் பாடல்களும் பாடப்பட்டன.

செங்கொடியின் நான்காவது மாநாடு நடந்து முடிந்த மூன்றரை ஆண்டு காலத்தில் திரிபுவாத போக்குகளுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து நடத்தும்போதே குறுங்குழு போக்குகளை முறியடிக்க நடந்த போராட்டங்களின் முக்கியத்துவத்தையும், இதன் காரணமாக அமைப்புக்குள் அரசியல் மத்தியத்துவம் அடையப்பட்டிருப் பதையும் தனது தொடக்க வுரையில் தோழர் K.N.R. எடுத்துக் காட்டினார். மாநாட்டின் முன்பு வைக்கப்பட்டுள்ள நகல் கட்சி திட்டமானது இந்த மாற்றத்தை பிரதிபலிப்பதுடன் கருதியல், அரசியல் வளர்ச்சிகளையும் குறிக்கிறது என்பதை எடுத்துரைத்தார். அனைத்திந்திய அளவில் போல்சுவிக் மாதிரி கம்யூனிஸ்ட் கட்சியை கட்டும் மறுசீரமைப்பு அரசியல் முயற்சியுடன் இவை தொடர்புள்ளவை என்பதையும், இந்த அளவில் மாநாடானது முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றத் தினைக் குறிக்கிறது என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

தோழர் M.S. ஜெயக்குமார் மாநாட்டின் முன் கட்சி நகல் திட்டத்தை முன்வைத்து பேசியதன் சாரம் வருமாறு:- “1970-வது திட்டம் இந்திய முதலாளிகளின் வர்க்கத் தன்மை தரகு முதலாளிகள் என்று மதிப்பிட்டிருந்தது. சி.பி.ஐ. சி.பி.எம் நிலைபாடுகளிலிருந்து இது அடிப்படையில் வேறுபட்டிருந்தது. 70-திட்டம் தொழிலாளி-விவசாயி கூட்டின் அடிப்படையில் பாட்டாளி வர்க்கத் தலைமையில் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்று வலியுறுத்திய போதிலும், புதிய சகாப்தம் பற்றிய



படிப்பகம்

www.padippakam.com

கருத்தாக்கத்தினால் அது கட்டுண்டிருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பதாவது மாநாட்டின் தாக்கத்திற்கு உட்பட்டு குறுங்குழு நிலைபாடுகளைத் தழுவிக் கொண்டது. இது அகிலத்தின் மற்றும் மாபெரும் விவாதத்தின் நிலைபாடுகளுக்கு மாறுபட்டதாகும். மாவோவின் மாபெரும் பங்களிப்புகளை புறந்தள்ளிய லின்பியோவின் குறுங்குழு போக்குக்கு இது இரையானதை சுட்டிக் காட்டுகிறது. மாசேதுங் சிந்தனை பெயரால் இது நடந்தது குறிப்பிடத் தகுந்தது. குறிப்பான சமூக யதார்த்தங்களை புறக்கணித்து அனைத்துலக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு இத்தகைய குறுங்குழு போக்கானது மாபெரும் ஊறு விளைவித்தது. உலக அளவிலும் இந்தியாவிலும் நடைபெற்றிருந்த மாற்றங்களின் அடிப்படையில் குறிப்பான ஆய்வுகள் மேற்கொண்டு திட்ட அணுகுமுறையை வகுத்துக் கொள்ளும் கடமையானது, இந்த குறுங்குழுப் போக்கால் புறந்தள்ளப்பட்டு இயக்கமானது பின்னடைவுகளுக்கு ஆளானது."

தோழர் M.S.J தொடர்ந்து கூறினார். "இந்தியாவில் உள்ள மற்ற அமைப்புகளைப் போல் இல்லாமல் இ.க.க (மா.லெ) செங்கொடி உலகிலும், இந்தியாவிலும் நிகழ்ந்த குறிப்பான மாற்றங்களை உணர்ந்தது, அங்கீகரித்தது. ஏகாதிபத்தியம் அதன் நவீன காலனிய இடைக்கட்டத்தில் உள்ளதை வரையறுத்தது. ஏகாதிபத்தியம் அண்மை ஆண்டுகளில் முன்னெடுக்கும் உலக மயமாக்கலையும் இதன் விளைவாக உலக மக்கள் மீதான கொடூர தாக்குதல்களையும் செங்கொடி புரிந்து கொண்டது. புதிய சமூக இயக்கங்கள் பூற்றிய தனது பார்வையை வளர்த்துக் கொண்டது. முன்னேறிச் செல்வதற்கு தடைக்கற்களாக இருந்த குறுங்குழு போக்கு செல்வாக்கிலிருந்து உடைத்துக் கொண்டு கருத்தியல் அரசியல் முன்னேற்றத்திற்கு பாதை வகுத்தது. 70திட்டத்தின் அணுகுமுறையிலிருந்து முறித்துக் கொண்டு புறவய நிலைமைகளை கருத்தில் கொண்ட புதிய திட்டத்தை முன் வைத்துள்ளது. இன்றைய நிலைமைகளின் ஆய்வின் அடிப்படையில் புதிய ஜனநாயக புரட்சியின் யுத்த தந்திர அணுகுமுறையை திட்டமானது முன்வைத்துள்ளது. இதன் மூலம் அரசியல் மையப்படுத்துதலை செங்கொடி அடைந்துள்ளது."

இந்த ஆவணம் முன்வைக்கப்பட்ட பிறகு பிரதிநிதிகள் 10 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு விவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் பொது விவாதத்தில் குழுக்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்கள் தமது கருத்துக்களை எடுத்துரைத்தனர். பல்வேறு ஆலோசனைகளையும் திருத்தங்களையும் முன் வைத்தனர். பொது விவாதத்திற்கு பின்னர் தோழர் ஜெயக்குமார் தமது பதில் உரையில் கீழ் வருவனவற்றைக் குறிப்பிட்டார். "மாசேதுங் சிந்தனை பெயரால் பண்பாட்டு புரட்சியின் போதும் 9-வது மாநாட்டின் போதும் நிலவிய குறுங்குழு போக்குகளுடன் கணக்கு தீர்த்துக் கொள்வது என்பது எந்த வகையிலும் சீனாவில் புதிய ஜனநாயக புரட்சியின் போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும், மாவோவினுடையதும் ஆன ஆக்க பூர்வ பங்களிப்புகளை மறுப்பதாகாது. அதைப் போலவே 1963 மாபெரும் விவாதத்தில் உள்ள குருச்சேவிய திரிபுவாத நிலைபாடுகளுக்கு எதிரான போராட்டத்தின் முக்கியத்துவத்தையோ, சோசலிச கட்டமைப்புக்கு அவர்கள் அளித்த பங்களிப்பையோ மறுப்பதாகாது. இந்த குறுங்குழு போக்குகள் அந்த நாட்களில் உலகில் உருவான மா.லெ குழுக்களிடையில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததை உணர்ந்து, அங்கீகரித்து அதை திருத்திக் கொள்ளாவிட்டால் இயக்கமானது முன்னால் செல்ல இயலாது என்பது உணரப்பட வேண்டும்."

பல்வேறு ஆலோசனைகளையும், திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டு இந்த ஆவணம் திருத்தப்பட்ட வடிவில் முன் வைக்கப்படும் என்ற அடிப்படையில் மாநாட்டின் பிரதிநிதிகள் கையொலி எழுப்பி தங்கள் ஒப்புதலை தெரிவித்தனர்.

அமைப்பு விதிகளுக்கு திருத்தங்களை முன் மொழிந்து பேசிய தோழர் P.J. பேபி 1977 வரை அமைப்பு ஒரு அமைப்பியல் வழிகாட்டு நெறியின் அடிப்படையில் செயல்பட்டதையும் கடந்த மாநாடானது ஒரு அமைப்பு விதியை வகுத்துக் கொண்டதையும் எடுத்துக் காட்டினார். இப்போது முன் வைக்கப்பட்டுள்ள திருத்தங்களானது தற்போது முன் வைக்கப்பட்டுள்ள கட்சி திட்டத்தின் அடிப்படை அணுகு முறைக்கு ஒத்திசைவான முறையிலும் போல்சுவிய மாதிரியிலான கட்சி கட்டுவதற்கு ஏற்ற முறையிலும் மாற்றங்களை முன் மொழிந்துள்ளதை அவர் எடுத்துரைத்தார். அனைத்து உண்மையான கம்யூனிஸ்ட் சக்திகளையும், இந்திய பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கும் ஒரு கட்சியில் மறு சீரமைப்பதற்கான ஒரு முயற்சியின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். குழு விவாதங்கள் மற்றும் பொது விவாதங்களுக்கு பிறகு அகிலத்தின் நிலைபாடுகளின் அடிப்படையில் அமைப்பு விதியானது வளர்க்கப்பட வேண்டும் என்று மாநாடு கோறி இந்த ஆவணத்திற்கு ஒப்புதல்


படிப்பகம்

www.padippakam.com

அளித்தது. இந்த மாநாட்டிற்கு பின்னர் மத்திய சீரமைப்புக் கமிட்டி மத்திய கமிட்டியாக இயங்கும் என்ற முக்கிய மாறுதலுக்கும் மாநாடு ஒப்புதல் அளித்தது.

கட்சி திட்டம், கட்சி அமைப்பு விதிக்கான திருத்தங்கள் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு அனைத்திந்திய செயலர் K.N.R. அரசியல் அமைப்பு அறிக்கையை முன்வைத்தார். அவர் உரையின் சாரம் வருமாறு:-

"நான்காவது மாநாட்டின் சமயத்தில் இருந்த அமைப்பின் நிலைமையையும் இன்று அது அடைந்துள்ள மாறுதலையும் தோழர்கள் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். 1983-ல் கேரளத்தில் அரசியல் மறுசீரமைப்பு மேற்கொள்ளப் பட்டது. 1989-ல் தவறான நிலைபாடுகளுடன் கணக்கு தீர்த்துக் கொண்டு, அதாவது நமது இயக்கத்தை பின்னுக்குத் தள்ளிய குறுங்குழுவாத நிலைபாடுகளை முறியடித்து நாம் போல்சுவிக் மாதிரியிலான கட்சியை கட்டும் முயற்சியை மேற்கொண்டோம். ஆனால் இது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. மூன்று உலகக் கோட்பாடு போன்ற எதிர்புரட்சி நிலைபாடும், மாசேதுங் சிந்தனை பெயரால் உலவிய "கலகம் செய்வது நீதியானது," "தலைமையை தகர்த்தெறிவோம்", போன்ற முழக்கங்களும், "இருவழிப் போராட்டம்" என்ற கருத்தாக்கமும், பண்பாட்டு புரட்சியாளர்கள் என்பவர்களையும் உள்ளடக்கிய பல்வேறு குறுங்குழு போக்காளர்களால் பரப்பப் பட்டது. குருச்சேவிய திரிபுவாதிகள் என்போர் செங்கொடியை வீழ்த்த செங்கொடியை உயர்த்தி பிடிப்பவர்கள் என்று மாசேதுங் சாடியது உங்களுக்கு தெரியும். ஆனால் இந்த குறுங்குழு போக்காளர்களோ "மாசேதுங் சிந்தனையை" உச்சரித்துக் கொண்டும், மாவோவின் மேற்கோள்களை மட்டும் கூறிக்கொண்டும், மாவோவின் பங்களிப்புகளுக்கும் மார்க்சிய-லெனினிய சாரத்திற்கும் எதிராக செயல் பட்டார்கள். எனவே குறுங்குழு போக்கை முறியடிக்கும் நமது போராட்டம் அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. நமக்குள்ளும் அத்தகைய குறுங்குழு போக்கின் செல்வாக்கு நீடித்திருந்ததால் நாம் 1999-மார்ச்சில் அரசியல் அமைப்பு தீர்மானத்தை முன் வைத்ததன் மூலமும் இதனைத் தொடர்ந்து 1999 அக்டோபரில் கட்சி கடிதத்தை வெளியிட்டதன் மூலமும் ஒரு மறுசீரமைப்பு இயக்கத்தை மேற்கொண்டோம். இன்னும் கூட முழுமையாக ஒழித்துக் கட்டப்படாத இந்த குறுங்குழு போக்குக்கு எதிரான போராட்டத்துடன் திரிபு வாதத்திற்கான போராட்டமும் தொடரப்பட வேண்டியது அவசியமாகும்."

தொடர்ந்து K.N.R. கூறியதாவது:-" இந்த காலகட்டத்தில் நாம் சாதித்தது குறைவானதாக இருந்தாலும், நமது அமைப்பு இன்னும் சிறியதாக இருந்த போதிலும் நாம் அடைந்த முன்னேற்றங்கள் அரசியல் மறுசீரமைப்பை மிக வேகமாக முன்னெடுக்க உதவியுள்ளது. அரசியல் மற்றும் அமைப்பு விஷயங்களில் ஒரு தகர்த்து முன்னேறுதல் சூழலை உருவாக்க இது பயன்படும். ஆனால் அமைப்பாக்கப்பட்ட இடது இயக்கங்களுக்கு தலைமைத் தாங்கும் தகுதியை அமைப்பானது எவ்வாறு அடைவது என்ற கேள்வி நம் முன்னால் உள்ளது. அனைத்து தோழர்களாலும் இது முக்கிய கேள்வி என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு சூழலில் இந்த அறிக்கையை தோழர்கள் மதிப்பீடு செய்ய வேண்டும்."

இந்த அறிக்கை மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பிறகு குழு விவாதங்களும், பொது விவாதமும் நடைபெற்றது. பல தோழர்கள் உற்சாகமாக விவாதங்களில் பங்கேற்றனர். செயலர் தமது பதில் உரையில் உலக அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி அமைக்கும் விஷயத்தில் அமைப்பின் முயற்சி பற்றி எடுத்துரைத்தார். உலகமயமாக்கலுக்கும் மதவகை பாசிசத்திற்கும் எதிராக நாடு தழுவிய எதிர்ப்பை கட்டமைப்பதையும், முழக்கங்கள் அடிப்படையிலான கூட்டு பிரச்சாரங்கள் பிற இடது-ஜனநாயக சக்திகளுடன் மேற்கொள்ளப் படுவதையும் எடுத்துரைத்தார். கட்சி மற்றும் வர்க்க மக்கள் திரள் அமைப்புக்களை கட்டுவதற்காக மாநாட்டு பிரதிநிதிகள் முன்வைத்த ஆலோசனைகள், திருத்தங்களுடன் ஆவணம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

டிசம்பர் 31 அன்று அனைத்து ஆவணங்களும் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் செயலர் மத்திய சீரமைப்பு கமிட்டிக்கு பதிலாக மத்தியக் கமிட்டிக்கான பட்டியல் ஒன்றை மாநாட்டில் முன்வைத்தார். இந்த பட்டியல் மாநாட்டு பிரதிநிதிகளால் உற்சாகமாக வரவேற்கப்பட்டது. தோழர் இல.கோவிந்தசாமி தமிழ்நாட்டிலிருந்து மத்தியக் கமிட்டி உறுப்பினராக தேர்வு பெற்றார். தோழர் K.N.R. மத்தியக்குழு செயலராக மத்தியக் குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டு மாநாட்டில் அறிவிக்கப்பட்டார். இதன்னைத் தொடர்ந்து சர்வதேசிய, தேசிய பிரச்சினைகளை உள்ளடக்கிய 23 தீர்மானங்களை மாநாடு ஏற்றுக்கொண்டது. இத்தீர்மானங்கள் பிப்ரவரி Red Star இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

மத்தியக் குழு செயலர் K.N.R. தமது முடிவுரையில் பிரதிநிதிகளையும், பார்வை யாளர்களையும் அனைத்திந்திய அளவில் போல்சுவிய மாதிரியிலான கட்சி ஒன்றினைக் கட்டும் கடமைக்கு அறைக்கூவல் விடுத்தார். உலக மயமாக்கலும் மதவகை பாசிசமும் முன் தள்ளியுள்ள சவால்களை எதிர்கொள்ள புரட்சிகர இடது மாற்று ஒன்றினைக் கட்டும் கடமையானது இன்றைய சிக்கலான நிலைமையில் கோருவதையும் அவர் எடுத்துரைத்தார். "புதிய ஜனநாயக புரட்சியை முன்னெடுத்து செல்ல அனைத்து துறைகளிலும் நமது முயற்சிகளை இரட்டிப்பாக்குவதன் மூலம் புதிய வரலாற்றை படைப்போமாக" என்று K.N.R. மாநாட்டிற்கு அறைகூவல் விடுத்தார்.

மாநாட்டு வரவேற்பு கமிட்டி நன்றி கூறியது. கர்நாடக மாநில கமிட்டிக்கும், வரவேற்பு கமிட்டிக்கும், தோழர்களுக்கும், தனது பாராட்டையும், நன்றியையும் மாநாடு தெரிவித்துக் கொண்டது. புத்தாண்டு வாழ்த்துக்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்ட தோழர்கள் புரட்சியின் கடமைகளை முன்னெடுக்க சபதம் மேற்கொண்டு தங்கள் தங்கள் மாநிலங்களுக்கு திரும்பினார்கள்.

---

## பத்திரிகைச் செய்தி

# இ.க.க (மா.லெ) செங்கொடியின் தமிழ் மாநில மூன்றாவது மாநாடு

1. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) செங்கொடியின் அனைத்திந்திய 5-வது மாநாட்டின் பகுதியாக தமிழ்நாட்டின் இ.க.க (மா.லெ) செங்கொடியின் 3-வது மாநில மாநாடு கோவையில் நடைபெற்றது.

2. டிசம்பர் மாதம் 10,11,12 தேதிகளில் அப்பு அரங்கத்தில் நடந்த இம்மாநாட்டில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நீண்டபயணம் ஆசிரியர் சுந்தரம் அவர்கள் கட்சியின் கொடியை ஏற்றினார். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி மாநாடு துவங்கப்பட்டது. இ.க.க (மா.லெ) செங்கொடியின் அனைத்திந்திய செயலாளர் K.N. ராமச்சந்திரன் மாநாட்டில் துவக்க உரை ஆற்றினார்.

3. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட கட்சி திட்டமானது உலக மயமாக்குதலுக்கும், வளரும் பாசிச அச்சுறுத்தலுக்கும் எதிராக வலிமையான மக்கள் இயக்கத்தைக் கட்டுமாறு அறைகூவல் விடுகிறது.

4. கட்சி மாநாட்டில் விவசாய தொழிலாளர்களின் நலன்களுக்காக கோலப்பன் கமிட்டி அறிக்கையை அமல்படுத்தக் கோரியும், விவசாயிகளும், தொழிலாளர்களும், தொழிற்சாலைகளும் நலிவடையும். விதத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை எதிர்த்தும், தமிழகத்தில் ஆலைகள் மூடப்பட்டிருப்பதையும் விருப்ப ஓய்வு திட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதை எதிர்த்தும், தமிழ் நாட்டில் இன்னும் பல இடங்களில் நிலவும் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்தும், நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகள் போராட்டத்தை ஆதரித்தும் தேயிலை தோட்ட முதலாளிகள் இச்சூழலை பயன்படுத்தி தொழிலாளர்களின் தினக் கூலியை குறைக்க முயலுவதை எதிர்த்தும், உலகமயமாக்கலையும் வளரும் மதவகை பாசிச முயற்சியையும் எதிர்த்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

5. மாநாட்டில் புதிய மாநிலக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் இல. கோவிந்த சாமி மாநில செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

6. தமிழ்நாட்டில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியை கட்டும் அறை கூவலுடன் மாநாடு முடிவு பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

# உலக வர்த்தக கழகத்தின் (WTO) பலிபீடத்தில் இந்திய விவசாயிகள்

உலக வர்த்தக கழகம் அமுலுக்கு வந்து ஆறு ஆண்டுகள் முடிந்து விட்டது. இந்திய விவசாயத்துறை WTO வின் நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்டு தாராளமயமாக்கல் செயல்படுத்தப்பட்ட பின் இந்திய விவசாயத் துறை அடைந்த பயன் ஒன்றுமில்லை. மாறாக பெரும் நெருக்கடிகளை சந்தித்து வரும் வேளையில் வேளாண் அமைச்சகம் இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தை தீவிரமாக அமல்படுத்தி வருகிறது.

'சந்தைப் பொருளாதாரம்' நியாயமான வர்த்தகம், சமமான வர்த்தகத்துக்கு வாய்பளிக்கும் என கூறியது பொய்யானது என நிரூபிக்கப் பட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகள் போராடத் தொடங்கியுள்ளனர். காங்கிரஸ் கட்சி பாராளுமன்றத்தில் விவசாயிகள் தொடர்பான பிரச்சனையில் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்து பிரச்சனையை விரிவாக விவாதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சோனியா காந்தி தமிழ் நாட்டுக்கு பறந்து வந்து மயிலாடு துறையில் விவசாயிகள் கூட்டத்தில் காவிரிப் பிரச்சனையை தீர்க்க துணை நிற்பதாக உறுதியளித்துள்ளார். ஆனால் கர்நாடகத் திலுள்ள காங்கிரஸ் ஆட்சி இடைக்காலத் தீர்ப்பையும் அமுல் படுத்தாமல் இழுத்தடிக்கிறது. தேவகவுடா சென்னைக்கு வந்து பாமாயில் இறக்குமதி தொல்லையால் இந்திய விவசாயிகள் படும் துன்பத்தை வெளிப்படுத்த பாமாயில் பாக்கெட்டை கிழித்து கீழே கொட்டி தமது எதிர்ப்பை தெரிவித்தார். இவர் தான் ஒரு விவசாயி எனக் கூறிக் கொண்டு பிரதமர் பதவியில் அமர்ந்து சில மாதங்கள் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்தியவர். முன்னாள் பிரதமர்களின் நால்வர் குழு விவசாயிகளின் நெருக்கடி பற்றி விரிவாக விளக்கி வருகின்றனர். ஆனால் உலக வர்த்தக கழகத்தில் இருந்து இந்தியா வெளியேற வேண்டும் என கூறுவதில்லை. சீர்திருத்தங்கள் தேவை என கூறும் தரகு முதலாளிய கட்சிகளின் தலைவர்களாக இவர்கள் உள்ளனர். WTO ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட காங்கிரஸ் ஆட்சியின் போது விவசாய அமைச்சராக இருந்த பல்ராம் ஜாக்கர், இந்த காட் ஒப்பந்தம் கையெழுத்தாகிய போது நாட்டின் நலனுக்கு இது எதிராக அமைந்தால் இந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்ற புரிதலுடன் கையெழுத்து இட்டதாகவும், தற்போதைய பி.ஜே.பி அரசாங்கம் இதை செல்லுபடியாகாதென்று அறிவிக்க வேண்டும் என கோரியுள்ளார்.

பஞ்சாப் முதல்வர் பிரகாஷ்சிங் யாதவ், அரியானா முதல்வர் ஓம் பிரகாஷ் சௌடாலா, பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் ஆகியோர் மக்களின் கடும் கோபத்தில் இருந்து தப்பிக்கும் பொருட்டு விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள தீவிரமான நெருக்கடியை கடுமையான குரலில் கண்டனம் செய்து வருகின்றனர். ஆயினும் WTO வில் இருந்து இந்தியா வெளியேற வேண்டும் என கோரவில்லை. ஆனால் மற்றொரு வகையினர் டாக்டர் வந்தனா சிவா தலைமையில் அரசியல் தலைவர்கள், விஞ்ஞானிகள், விவசாயிகள், மற்றும் NGO வினரை உள்ளடக்கிய பிரிவினர் 'விவசாயத்தைப் பாதுகாப்போம் - நாட்டைப் பாதுகாப்போம்' என்ற முழக்கத்தினை முன்வைத்து உணவு மற்றும் விவசாயம் தொடர்பான மக்கள் அறிவியல் மாநாடு கூட்டி WTO வில் இருந்து இந்தியா வெளியேற வேண்டும் என கோரியுள்ளனர்.

விவசாயம் தொடர்பான WTO ஒப்பந்தம் மூன்று பிரிவுகளைக் கொண்டது. 1. இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் நீக்குதல் (அளவுக் கட்டுப்பாடுகள் நீக்குதல்) 2. விவசாயத்துக்கு அளித்து வரும் மொத்த மானியத்தை அதாவது உற்பத்தி சார்ந்த, உற்பத்தி சாராத மானியத்தை குறைத்தல் பற்றி 3. ஏற்றுமதி மானியத்தை குறைத்தல். WTO விவசாய மானியத்தை குறைக்கச் சொல்கிறது. பன்னாட்டு நிதியம், உலக வங்கி அமைப்புச் சீர்திருத்தம் என சொல்லி நிதிப் பற்றாக் குறையை குறைக்கச் சொல்கிறது. இதற்கு அடிபணிந்து அரசு விவசாய மானியம், பொது விநியோக மானியம் ஆகியவற்றை குறைப்பதன் மூலம் மக்களின் வாழ்வை பயமுறுத்துகிறது.

உலக வர்த்தக கழகத்தில் (WTO) வளர்ந்த நாடுகள் அதாவது ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் மற்றும் வளரும் நாடுகள் அதாவது நவீன காலனி நாடுகள் ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன. வளர்ந்த நாடுகள் ஆண்டுக்கு 150 பில்லியன் டாலர் (1பி 100 கோடி. 1 டாலர் - 45 ரூ). ஒரு விவசாயிக்கு ஆண்டுக்கு சராசரியாக 29000 டாலர் (ரூ.17,05,000) வழங்குகிறது. அமெரிக்கா 90,000 விவசாயிகளுக்கு 1996-ல் 25.5 பி. டாலர் மானியம் வழங்கியுள்ளது



படிப்பகம்

www.padippakam.com

ஐரோப்பிய யூனியன் 85 பி. டாலர் அளித்துள்ளது. OECD நாடுகள் 1998-ல் ஏறத்தாழ 363 பி. டாலர் விவசாய மானியம் வழங்கியுள்ளது. வளரும் நாடுகள் ஆண்டுக்கு 19 பி.டாலர் வழங்குகிறது. இந்தியா தனது 55கோடி விவசாயிகளுக்கு 1பி. டாலர் மட்டும் மறைமுக மானியம் வழங்குகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் விவசாயிகள் மக்கள் தொகையில் 2 அல்லது 3 சதவீதம் மட்டுமே உள்ளனர். அனைத்து உற்பத்தியும் சந்தைக்காக தயார் செய்யப்படுகிறது. இந்தியாவில் 65 அல்லது 70 சதவீதம் மக்கள் விவசாய உற்பத்தியை சார்ந்து வாழ்கின்றனர். பெரும்பகுதி சுய தேவைக்காகவும் சிறிய பகுதி சந்தைக்காகவும் அனுப்பப்படுகிறது. அதிக உற்பத்தி திறன், அதிக அளவு மானியம், அதிக முதலீடு, நவீன தொழில் நுட்பம், பெருவித உற்பத்தி ஆகிய இயல்புகளைக் கொண்ட வளர்ந்த நாடுகள் தான் உலகச் சந்தையில் ஆதிக்கம் வகிக்கும் நிலைமை உள்ளது. ஏகாதிபத்திய நாட்டு விவசாயிகளை நவீன காலனி நாட்டு விவசாயிகள் வெல்ல முடியுமா?

இந்திய வேளாண்துறையில் மூலதன உருவாக்கம் தேக்க நிலையிலேயே இருந்து வருகிறது. 1996-99 மூன்று ஆண்டுகளாக 16,500 கோடி (93-94 விலைகள்படி) யாகவே இருந்து வருகிறது. வேளாண்துறைக்கு அரசு செய்யும் முதலீடும் குறைந்தே வருகிறது. 1996-97-ல் 28.2 சதவீதத்தில் இருந்து 1998-99-ல் 23.6 சதவீதமாக குறைந்துள்ளது.முதலீடு பற்றாக்குறை, இடுபொருட்கள் விலை உயர்வு, உற்பத்தி செலவு அதிகரித்தல், விளை பொருட்களுக்கு குறைவான விலை, சிறு விகித உற்பத்தி ஆகியவற்றால் விவசாயத்துறையில் நெருக்கடி தீவிரமடைந்து காணப்படுகிறது. குறிப்பாக மத்தியதர, சிறு விவசாயிகள் நாசமடைந்து வருகின்றனர். தற்போது மத்திய அரசு புதிய விவசாயக் கொள்கையை அறிவித்து உள்ளது. ஆண்டுக்கு 4 சதவீத வளர்ச்சியை அடையவும் இடுபொருட்களின் உபயோகத்தை அதிகரிக்கவும் பெரும் முதலாளிகளை விவசாயத்துறையில் ஈடுபடுத்தும் பொருட்டு ஒப்பந்த முறை விவசாயத்தை கொண்டு வரவும் இக்கொள்கையை அறிமுகப்படுத்துகிறது. பன்னாட்டுக் கம்பெனிகளும் பெரு முதலாளிகளும் வேளாண் சம்பந்தப்பட்ட வர்த்தகத்தில் ஈடுபடவும், சிறிய, நடுத்தர விவசாயிகள் தங்கள் நிலத்தை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளி யேறும் நிலமையும் இதனால் உருவாகும். அரசாங்கம் தனது வெளியேற்றும் கொள்கையை (ExitPolicy) விவசாயிகளுக்கும் விரிவு படுத்துவதாக தேசிய விவசாய கொள்கை அமைகிறது.

மேலும் வாஜ்பாய் அரசாங்கம் இறக்குமதி மீதான அளவுக் கட்டுப்பாடுகளை 714 பொருட்களுக்கு நீக்கியுள்ளது. மீதம் உள்ள வற்றிற்கு கட்டுப்பாடுகளை ஏப்ரல் மாதம் நீக்க உள்ளது. 2003-ல் தான் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என OECD நாடுகளோடு ஒப்பந்தம். ஆனால் அமெரிக்காவின் நிர்பந்தத்துக்கு அடிபணிந்து முன்னரே கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளது. இதில் விவசாயம் சார்ந்த பொருட்களே அதிகம் உள்ளது. பாமாயில் இறக்குமதியால் தேங்காய், நிலக்கடலை விலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தேயிலை, ரப்பர் இறக்குமதியால் இவைகளின் விலையும் குறைந்து விட்டது. பால் பவுடர், சர்க்கரை, ஆப்பிள் இப்படியாக ஏராளமான பொருட்கள் இறக்குமதியால் இந்தியாவின் உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. தேயிலை, ரப்பர் விவசாயிகள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். சென்ற ஆண்டு 195.4 லட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி ஆகியுள்ளது. உலகில் சர்க்கரை உற்பத்தியில் முதல் நாடாக இந்தியா வந்துள்ளது. ஆயினும் பாகிஸ்தான் உட்பட பல நாடுகளில் இருந்து சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது. சந்தையில்லாமல் பலலட்சக் கணக்கான டன்கள் சர்க்கரை தேங்கி கிடக்கிறது. இதனால் கரும்பு சாகுபடியாளர்கள் பெரும் துன்பங்களை சந்தித்து வருகின்றனர். உணவுதானிய உற்பத்தியும் 21 கோடி டன்கள் தாண்டியுள்ளது. 50% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். மிகை உற்பத்தி குறைவான நுகர்வு. மக்களின் வாங்கும் சக்தி குறைந்த நிலைமை.

கடந்த 50 ஆண்டுகளில் தரகு முதலாளி, நிலப்பிரபுக்களின் அரசாங்கம் கொண்டு வந்த நிலச்சீர்திருத்தம் பெரும்பாலான விவசாயிகளை வெளியேற்றம் செய்தது. தற்போது சந்தை முறைக்கு ஆதரவாக சிறுவிவசாயிகள் நிலத்தை பிடுங்கி பெரும் முதலாளிகளுக்கும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும் அளித்து விவசாயிகளை விரட்டப் பார்க்கிறது. ஆதிவாசிகளின்



படிப்பகம்

www.padippakam.com

நிலங்களையும் மலைவளங்களையும் MNC க்களிடம் அல்லது பெருமுதலாளிகளிடம் அளிக்க முயற்சி செய்கிறது. விவசாயத்தை சந்தை ஆதிக்கத்தின் கீழ் கொண்டு செல்வது மூலம் விவசாயிகள், ஆதிவாசிகள் நகர்ப்புற ஏழைகள் வாழ்வு துன்பமயமானதாக மாறும் நிலையை தடுக்க உலக வர்த்தக கழகத்தில் இருந்து இந்தியா வெளியேற வேண்டும். விவசாயத்துறையில் பெரு முதலாளிகளும், பன்னாட்டுக் கம்பெனிகளும் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்போம். விவசாயிகள் நலனுக்கான முற்போக்கான நிலச்சீர்திருத்தம் மேற்கொள்வோம்.

## பசுமைபுரட்சி நாயகரின் சுய வாக்குமூலம்

டாக்டர் எம்.எஸ் சுவாமிநாதன் பசுமைப் புரட்சிக்கு ஆதரவாளர் என்பது நாடறிந்த விசயமாகும். அவர் சிறந்த வேளாண் விஞ்ஞானியாகவும் கருதப்படுகிறார். அவர் தற்போதைய விவசாய நிலைமை குறித்து கூறியவை வருமாறு.

* இந்திய விவசாயம் தற்போது குறுக்கு தெருக்களில் உள்ளது.

* 45 கோடி டன் கோதுமையும், அரிசியும் அரசு கிடங்குகளில் உள்ளது. ஆனால் 25 கோடி குழந்தைகளும், பெண்களும், ஆண்களும் ஒவ்வொரு நாளும்பகுதி யளவில் பட்டினியாக உள்ளனர்.

* வாழ்வுக்கான உத்திரவாதமே இந்தியாவில் தேவைப்படுகிறது.

* இந்திய விவசாயத்தை இரு பிரச்சினைகள் அச்சுறுத்துகிறது. ஒன்று:- உள் அம்சம்; உயிரியல் சார்ந்த உற்பத்திதிறன் முன்னேறி நிலைப்பதற்கு சுற்றுச் சூழல் அடித்தளம் தேவைப்படுகிறது. இதற்கு ஊறு ஏற்படுவதுதான் உள் அம்சம். இரண்டு:- வெளி அம்சம்; 1. ஏற்றத் தாழ்வான வர்த்தக உறவுகள் 2. விஞ்ஞானத்தின் மீதான ஒரு சார்பு கட்டுப்பாடு அதிகரித்தல். 3. கடல் மட்டத்திலும் பருவ நிலையிலும் ஏற்படும் மாற்றங்கள்.

* வளர்ச்சியடைந்த நாடுகள் நீலப் பெட்டி (BLUE BOX) பச்சை பெட்டி (GREEN BOX) போன்றவற்றை தங்கள் நாட்டு விவசாயிகள் நலன்களுக்காக உலக வர்த்தக கழக ஒப்பந்தத்தில் சேர்த்துள்ளார்கள். பச்சைப் பெட்டி பல்வேறு விதமான உதவிகள், மான்யங்கள் அளிக்க பயன்படுகிறது. நீலப்பெட்டி மூலம் உற்பத்தியைக் கட்டுப் படுத்துவதற்கு மானியம் அளிக்கப்படுகிறது.

* ஒடுக்கப்படும் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு வளர்ந்த நாடுகள் மிகப் பெரும் வரிகளை விதிக்கின்றன. உதாரணத்திற்கு ஜப்பான் அரிசிக்கு 2000 சதவிகிதம் இறக்குமதி வரி விதிக்கிறது. இத்துடன் ஒடுக்கப்படும் நாடுகளுக்கு வளர்ந்த நாடுகளில் சந்தையை மறுப்பதுடன் பணக்கார நாடுகளுக்கு ஒடுக்கப்படும் நாடுகளில் சந்தையை திறக்கவும் வற்புறுத்தப்படுகிறது.

* இந்தியாவில் அளவு கட்டுப்பாடுகள் (QRS) நீக்கப்படுவதால் ஏழை விவாசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும். இந்தியாவில் ஏற்றுமதி மான்யங்கள் அளிப்பதில்லை. ஆனால் (OECD) நாடுகள் 8% அதாவது 363 பில்லியன் டாலர் உதவியை அவர்கள் விவசாயத்திற்கு அளிக்கிறார்கள்.

* நாம் 'பிழைப்பதற்கான' (LIVELYHOOD BOX) பெட்டி கேட்டு போராட வேண்டும்.

* உலகமயமாக்கல் வேலைவாய்ப்பற்ற பொருளாதார வளர்ச்சியைத்தான் இந்தியாவிலும் உலகிலும் ஏற்படுத்தியுள்ளது.

* இந்தியாவில் ஏழு லட்சம் கிராமங்களில் 25 கோடி மக்கள் வறுமைக் கோட்டுக்குள் வாழ்கிறார்கள்.

* ஏழைக்கு ஒரு ரூபாய் அளிக்க அரசாங்கம் ஆறு ரூபாய் செலவு செய்கிறது



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிகர இடது மாற்றைக் கட்டுவது பற்றிய பிரச்சினை

- K.N. இராமச்சந்திரன்

அமெரிக்காவில் வாஜ்பேயி அவர்கள் தாம் ஒரு கட்டுப்பாடுள்ள சுயம் சேவக் (ஆர்.எஸ்.எஸ்) என்று அறிவித்துக் கொண்டதில் புதியதோ, வழக்கத்திற்கு மாறானதோ ஒன்றும் இல்லை. இதைப் போலவே மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பா.ஜ.க-வுக்கு நாடாளு மன்றத்தில் கிடைக்குமானால் அயோத்தியில் இராமர் கோயிலைக் கட்டும் நிகழ்ச்சி நிரலை அது நிறைவு செய்யும் என்பதும் எதிர்பாராதது அல்ல. முன்னால் பா.ஜ.க. தலைவர் குசாபாவு தாக்கர் கூறியதை தற்போது வாஜ்பேயி திட்டமிட்ட முறையில் தெளிவான வார்த்தைகளில் மீண்டும் கூறியுள்ளார். பிறருக்கு எரிச்சலூட்டக் கூடிய அவரது இந்த பேச்சு அவர் உண்மையில் யார் என்பதை அம்பலப்படுத்தி மிதவாத முகமூடியை கிழித்து போட்டது. அவரது அமைச்சரவையில் உள்ள இஸ்லாமிய உறுப்பினர் அளித்த இப்தார் விருந்தில் அவர் இராமர் கோயில் இயக்கத்தை ஆதரித்ததுடன், பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் கோயில் கட்டப்படும் என்பதை பிரகடனப் படுத்தவும் செய்தார். இது மட்டுமல்ல, 1992-ல் மசூதி இடிப்புக்கு தலைமை அளித்த அத்வானியும் மற்ற இரு அமைச்சர்களும் அப்பாவிகள் என்று அவர் சான்றும் அளித்தார். வாஜ்பேயி நமக்கு கூறுகிறார். "ஆர்.எஸ்.எஸ் உணர்வுகள் தேசிய உணர்வுகளாம்."

வாஜ்பேயியின் கல்லூரி நாட்களில் தனது விடுதி தோழர்களை அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக பிரிட்டிஷ் காவல் துறையிடம் காட்டிக் கொடுத்தது அனைவரும் அறிந்த ஒன்றுதான். இத்தகைய மனிதரிடம் வேறு எதையாவது எதிர்பார்ப்பவர் முட்டாளாகத்தான் இருக்க வேண்டும். ஆனாலும் அவர் துரோகி பாத்திரத்திலிருந்து ஒரு சிறிது மாறியுள்ளார் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தனது ஆர்.எஸ்.எஸ் தொடர்புக்கு பின் அவர் மதவகை பாசிச பிற்போக்காளர் ஆகிவிட்டார். சங்க குடும்பத்தின் முகமூடியாக அவர் சிறந்த முறையில் செயல்பட்ட போதிலும் ஒவ்வொரு அங்குலத்திலும் தாம் ஒரு சுயம்சேவக் என்பதை எப்போதும் நிருபித்து வருகிறார். எரிச்சலூட்டக் கூடிய, தூண்டிவிடக் கூடிய அந்த பேச்சு மத அடிப்படையிலான வெறுப்பை அதிகரிக்கும் என்பதும், மதவகைப்பட்ட மோதல்களை உருவாக்கும் என்பதும் அவருக்கு நன்கு தெரியும். ஆனால் அதை அவர் விரும்புகிறார்.

காட்டுமிராண்டித்தனமானதும், குற்ற மயமானதுமான நடவடிக்கைகள் மூலமே இந்துத்துவத்தை பரப்ப முடியும். அதாவது பாசிச இந்து நாட்டின் அரசியலைப் பரப்ப முடியும். இதன் மூலம் மக்களை பிளவுபடுத்த முடியும்; அதிகாரத்திற்கு வர முடியும், நிலைநிறுத்த முடியும் என்பது வாஜ்பேயி, பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ் குடும்பத்திற்கு நன்கு தெரியும். உத்திரபிரதேச உள்ளூர் தேர்தல்களில் பா.ஜ.க. பெற்ற பின்னடைவுக்கு பின்னர் இத்தகைய தூண்டி விடும் வாஜ்பேயி அறிக்கையும், தனது உண்மையான ஆர்.எஸ்.எஸ் முகத்தைக் காண்பித்துக் கொண்டதும் நடந்தது ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல. வாஜ்பேயியும் அவரது குழுமமும் வரப்போகும் உ.பி தேர்தல்கள் மற்றும் பிற முக்கிய மாநில தேர்தல்கள் குறித்து உண்மையிலேயே அச்சமடைந்து உள்ளார்கள்.

உலகமயக் கொள்கைகளுக்கு எதிரான மக்களது எதிர்ப்பு கூர்மை அடைந்து பல்வேறு போராட்டங்களாக வெடிக்கிறது. டெல்லியில் அதிகாரத்தில் உள்ள கட்சி என்ற முறையில் பாரதிய ஜனதா கட்சி இதைக் கண்டு உண்மையிலேயே அஞ்சுகிறது. தேர்தல்களின் போது உலகமயக் கொள்கைகளிலிருந்தும் பல்வேறு துறைகளில் அவற்றின் விளைவுகளிலிருந்தும் மக்களது கவனத்தை திசை திருப்புவதற்காக பா.ஜ.க முயலுகிறது. தனது சொந்த நிகழ்ச்சிநிரலை செயல்படுத்த விரும்பும் பா.ஜ.க. எல்லா எதிர்ப்பையும் தனது பின்னால் வளைத்து போட துடிக்கிறது. இந்துத்துவா நிகழ்ச்சி நிரல் மட்டும் தேர்தல் பிரச்சினையாகும் போது, எதிர் தரப்பும் பா.ஜ.க-யின் மதவகை அணுகுமுறையின் மீதே கவனத்தை குவிக்கும்போது, இது பா.ஜ.க-வின் வளர்ச்சிக்கே உண்மையில் உதவும். பொருளாதாரக் கொள்கைகளைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் முதல் சி.பி.எம் வரையிலான பெரிய கட்சிகள் அனைத்தும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு இணக்கமாக உள்ளன என்பதை பா.ஜ.க எடுத்துக் காட்டி, தான் மட்டும் குற்றவாளி அல்ல என்று கூறி தப்பித்துக் கொள்ளும். எனவே உலகமயமாக்கல் தீவிரமாக செயல்படுத்தப் படுகையில் அதனுடைய விளைவுகளுக்காக பா.ஜ.க மட்டும்



படிப்பகம்

www.padippakam.com

பொறுப்பாக இருக்க முடியாது. புயல் வேகத்தில் உலக மயக் கொள்கைகள் அமல்படுத்துவதை மறைப்பதற்காக சிறந்த ஆயுதமாக வாஜ்பேயி அரசாங்கத்திற்கு இந்துத்துவா ஆட்டச் சீட்டு இருப்பது மறுபடியும் மறுபடியும் நிரூபிக்கப் பட்டுள்ளது.

1996-ல் தனது 13 நாள் ஆட்சிக் காலத்தில் மகாராட்டிர என்ரான் திட்டத்துக்கு வாஜ்பேயி அரசாங்கமானது அதிரடியாக கொடுத்த ஒப்புதலானது மின்சாரத்தை பயன்படுத்தாமல் உள்ளபோதே ஆயிரம் கோடி ரூபாயை என்ரான் கம்பெனிக்கு தரும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. மின்சாரத்தை ரூபாய் ஐந்துக்கும் அதற்கு மேலும் வாங்குவதால் ஆண்டுக்கு ரூபாய் இரண்டாயிரம் கோடி தரவேண்டியுள்ளது. இதற்கு சம பொறுப்பு காங்கிரசுக்கும் இருக்கிறது என்று கூறி பா.ஜ.க தப்பிக்க பார்க்கிறது. இதைப் போலவே காங்கிரசை எடுத்துக் காட்டி வங்கிகளில் உள்ள அரசு பங்கினை 51-லிருந்து 33 சதவிகிதத்திற்கு குறைக்க பா.ஜ.க. முடிவெடுத்துள்ளது. காங்கிரஸ் 1994-ல் 100 சதவிகிதத்திலிருந்து 51 சதவிகித்திற்குப் பங்கை குறைத்ததை யஷ்வந்த் சின்கா எடுத்துக் காட்டி வங்கிகள் தேசியமயமகற்றுதலை நியாயப் படுத்துகிறார்.

சுருங்கக் கூறுவோமானால் வாஜபேயி அரசாங்கம் 'தேசிய இணக்கம்' அடிப்படையில் தான் உலகமயமாக்கல் நடைமுறைப் படுத்தப்படுவதாக அனைவரையும் திருப்திப் படுத்த முயற்சிகள் செய்கிறது. பிற அனைத்து விஷயங்களைப் போலவே, கடந்த ஆண்டுகளில் காங்கிரஸ் எவ்வாறு ஏகாதிபத்தியம் மற்றும் உள்ளூர் ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்கு செயலாற்றியதோ அவ்வாறே பா.ஜ.க-வும் செயலாற்றுகிறது. உதாரணத்திற்கு 1991-ல் காங்கிரஸ் தலைமையானது ஏகாதிபத்தியத்தின் உலக மயமாக்கல் அடிப்படையிலான புதிய பொருளாதாரக் கொள்கையை அமல்படுத்து வதற்கு முன்பு எவ்வாறு தேசிய இணக்கத்திற்கு தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டதோ அவ்வாறேதான் பா.ஜ.கா-வும் தற்போது பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அந்நிய செலவாணி நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவது என்ற பெயரில் நேருவியக் கொள்கைகளை கைவிட்டபோது நரசிம்மராவும் மன்மோகன் சிங்கும் இவ்வாறுதான் ஒரு தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள் என்பதை நினைவு கூறுவது பலன் உள்ளதாக இருக்கும். புதிய தாராளவாதக் கொள்கைகளை எங்கெங்கும் திணிப் பதற்கும் ஐ.எம்.எப், உலக வங்கி, காட் ஆதரித்த உலகமயமாக்கல் ஆட்சியை விளம்பரப் படுத்துவதற்கும் புதிய பொருளாதாரக் கொள்கை ஒன்றே முன்னேற்றத்திற்கான வழி என்பதான ஏகாதிபத்திய பிரச்சாரத்துடன் ஒத்துப் போகும் ஒரு புகழ்ச்சி பிரச்சாரத்தை நிறுவன ரீதியான பொருளாதார வல்லுநர்களும், தரகு வர்க்க அறிவாளர்களும் மேற்கொள்ளுகிறார்கள்.

ஆனால் தற்போது நிலைமையானது மாறுபட்டுள்ளது. 1960-களின் பிற்பகுதி யிலிருந்து திணிக்கப்பட்ட புதிய தாராளவாதக் கொள்கைகளும், 1990-களில் தீவிரமாக வளர்க்கப்பட்ட உலக மயமாக்கலும் நவீன காலனிகளில் உள்ள பரந்துபட்ட மக்களால் மட்டுமல்ல, ஏகாதிபத்திய நாடுகளில் உள்ளவர்களாலும் தீவிரமாக எதிர்க்கப்படுகிறது. எங்கெங்கும் ஏகாதிபத்தியம் மற்றும் தரகர் ஆட்சிக்கு எதிராக இக்கொள்கைகளை எதிர்த்து பரந்துபட்ட மக்கள் வீதிகளுக்கு வந்து போராடுவது அதிகரித்துள்ளது. இந்தியா இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. உலக மயமாக்கலை அமல்படுத்தியதால் தான் காங்கிரஸ் 1996 மற்றும் 1999 தேர்தல்களில் பாதிக்கப்பட்டு மோசமான பின்னடைவுகளைச் சந்தித்தது. 1996-98ல் தேவகவுடாவையும், குஜ்ராலையும் முன்னிறுத்தி அரசாங்கம் நடத்திய ஐக்கிய முன்னணியை உருவாக்கிய கட்சிகளும் கூட 1999 தேர்தல்களில் இதன் காரணமாகவே மாபெரும் சரிவைச் சந்தித்தன. ஒவ்வொரு துறையிலும் தொழிலாளர்கள், வெள்ளைச் சட்டை ஊழியர்கள், விவசாயிகள் மற்றும் நடுத்தர வர்க்கங்கள் உலகமயக் கொள்கைகளின் விளைவால் ஏற்படும் நாசத்திற்கு எதிராக ஏராளமான போராட்டங்களில் திரளுகிறார்கள்.

அனைத்து கட்சிகளும் உலகமயமாக்கலை மத்தியிலோ அல்லது மாநிலங்களிலோ தாங்கள் ஆட்சிக்கு வருகையில் விசுவாசமாக அமல்படுத்தினாலும் கூட உலகமயமாக்கலுக்கு எதிராக குறிப்பாக அதன் விளைவுகளுக்கு எதிராக வார்த்தை அளவிலாவது ஏதாவது கூறுகிற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. எனவே தான் வாஜ்பேயி அரசாங்கம், நாட்டின் நலன்களை ஏகாதிபத்திய வாதிகளுக்கு விற்றுக் கொண்டிருக்கும் போதிலும், அனைத்து விதங்களிலும் நாட்டை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் போதிலும் தனது நிகழ்ச்சி நிரலாக இதை மக்களிடம் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

செல்ல முடியாது. ஆதலால் ஆர்.எஸ்.எஸ் குடும்பத்தின் முக்கிய தலைவர்களான சுதர்சனும், பா.ஜ.க சித்தாந்தி கோவிந்தாச்சார்யாவும் தனது ஊழியர்களையும், பொதுமக்களையும் ஏமாற்றுவதற்காக உலக மயமாக்கலுக்கு எதிரானவர்களாகவும் சுதேசி வழக்குரை ஞர்களாகவும் தம்மை காட்டிக் கொள்ளுவதற்கு முயற்சிக்கிறார்கள்.

உலகமயமாக்கலுக்கு மக்களிடமிருந்து எழும் கூர்மையான எதிர்ப்பினால் வாஜ்பேயி அரசாங்கத்தை தான் மட்டுமே காப்பாற்ற இயலாது என்பதை ஆர்.எஸ்.எஸ் உணர்ந்துள்ளது. எனவேதான் விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் போன்ற சக்திகள் மூலம் 2001-ம் ஆண்டை இராமர் கோயில் கட்டும் ஆண்டாக பிரகடனம் செய்ய அழுத்தம் கொடுத்துள்ளது. கபடத்தனமான முறையில் ஒவ்வொரு பிரச்சினையும் மதமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு மத வெறுப்பும், பிரிவினையும் வளர்க்கப்படுகிறது. இந்துத்துவா தாக்குதலினது பொதுவான திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் வாஜ்பேயி பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயிலைக் கட்டுவதையும், தனது குற்றவாளி அமைச்சர்களை பாதுகாப்பதையும் வெளிப்படையாக அறிவித்தார். வரும் நாட்களில் அவர் பா.ஜ.க நிகழ்ச்சி நிரலை மிகவும் கூர்மையாக முன் வைப்பார். அவரது தேசிய ஜனநாயக முன்னணியில் உள்ளவர்கள் போலியான மதச்சார்பின்மையை உச்சரித்துக் கொண்ட அவருடைய இந்த செயலுக்கு துணை போவது நடக்க இருக்கிறது.

இப்போது அனைத்து முற்போக்கு, மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் முன் உள்ள முக்கிய கேள்வி எதுவென்றால் ஆர்.எஸ்.எஸ் குடும்பத்தின் பின்னால் உள்ள பா.ஜ.க அரசாங்கத்தின் உலகமயமாக்கல் - மதவாத பாசிச தாக்குதலை எவ்வாறு எதிர் கொள்ள போகிறார்கள் என்பதுதான். பா.ஜ.க-வுக்கு எதிராக தான் தான் என்பதற்காக காங்கிரஸ் தனது சொந்த மாதிரி உலகமயமாக்கலையும் மதவாதத்தை சாந்தப் படுத்துவதையும் முன்வைக்கும் அற்பத்தனமான அரசியல் செயல்பாடுகளைத் தான் அதிகபட்சமாக நாம் எதிர்பார்க்க முடியும். பா.ஜ.க-விலிருந்து அடிப்படையில் பெரிதும் வேறுபடாத இந்த சந்தர்ப்பவாத நிகழ்ச்சி நிரல் மூலம் காங்கிரஸ் ஓரளவு சக்திகளை தன்பக்கம் ஈர்க்க சிறிது வாய்ப்புள்ளது.

சி.பி.ஐ, சி.பி.எம் -மாலும் இதர அனைத்து மையவாத சக்திகளாலும் விவாதிக்கப்படும் 'மூன்றாவது அணி' எத்தகையது? காங்கிரஸ் மாற்றிலிருந்து எந்த வகையிலாவது மாறுபட்டுள்ளதா? 96-98-ல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அடிமைத்தனமான முறையில் காங்கிரஸ் ஆதரவில் நிலை பெற்றிருந்ததானது இந்த வகை கூட்டணியின் சந்தர்ப்பவாதத்தை ஏற்கெனவே அம்பலப்படுத்தியுள்ளது. இப்போது பேசப்படும் மூன்றாவது அணியும் முன்னர் இருந்த ஐக்கிய முன்னணியிலிருந்து எந்த வகையிலும் வேறுபட்டதாக இருக்கப் போவதில்லை. சி.பி.எம் தலைமையும், வி.பி.சிங் போன்ற தலைவர்களும் பா.ஜ.க அல்லாத காங்கிரஸ் அல்லாத மூன்றாவது அணி பற்றி என்னதான் பேசினாலும், பா.ஜ.க. ஒருவேளை தோற்கடிக்கப்பட்டால் மூன்றாவது அணியின் ஆதரவிலான காங்கிரஸ் அரசாங்கமோ அல்லது காங்கிரஸ் ஆதரவிலான மூன்றாவது அணி அரசாங்கமோ சந்தர்ப்பவாத வழியில் நடைமுறையில் அமையக் கூடும். ஆர்.எஸ்.எஸ் குடும்பத்தினதும், பா.ஜ.க. வினதும் மதவகை பாசிச நிகழ்ச்சி நிரலுக்கு எதிர்ப்பை அளிப்பது தவிர மேற்கொண்டு மக்களுக்கு அளிக்க இவற்றிடம் என்ன உள்ளது?

இன்று புரட்சிகர இடதுசாரி சக்திகளிடம் எழுந்துள்ள உண்மையான சவால் இதுதான். இடதுசாரி சக்திகளின் அமைப்பு பலம் தற்சமயம் சிறியதாக இருந்தபோதிலும், உலகமய மாக்கலுக்கும், மதவகை பாசிசத்திற்கும், முழுமையான எதிர்ப்புடைய நிகழ்ச்சி நிரலுடன் வெளிவரவேண்டும். மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியாவை கட்டுவதற்கு ஒரு சுய சார்புள்ள தேசிய வளர்ச்சி கொள்கையை முன் வைத்து, ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கும், பா.ஜ.க.வின் மதவகை பாசிசத்திற்கும் காங்கிரசின் மதவாதத்துடன் ஒத்துப் போதலுக்கும் எதிராக உள்ள கோடிக்கணக்கான மக்களின் விருப்பங்களை உள்வாங்கி செயல்படுவதற்கு முனைய வேண்டும். உலகமயமாக்கலுக்கும், மதவகை பாசத்திற்கும் எதிராக ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு செயல் திட்டத்தின் அடிப்படையில் மக்களை திரட்டுவதற்கு புரட்சிகர இடது சாரி சக்திகள் ஒன்றுபட்டு செயல்படுவார்களா என்பதுதான் இன்றைய முக்கிய கேள்வியாக உள்ளது. இன்று இத்தகைய முயற்சி எவ்வளவு சிறியதாக காணப்பட்டாலும், இவ்வாறு எடுக்கப்படும் முன்முயற்சி தான் வரும் ஆண்டுகளில் மக்களுக்கான உண்மையான மாற்றாக அமைய இயலும். முற்போக்கான, மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளையும், ஒடுக்கப்படும் மக்களையும் எதிர்காலத்தில் திரட்டுவதற்கான துவக்க முனையாக அமையும் விதத்தில் சி.பி.ஐ. (எம்.எல்) செங்கொடி அனைத்து புரட்சிகர இடதுசாரி சக்தி களையும் ஒருங்கிணைக்க இந்த திசை வழியில் நடைபோட உறுதி பூண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# மக்களின் அனைத்து போராட்டங்களையும் சர்வதேச பாட்டாளி வர்க்க போராட்ட நலன்களுக்கு உட்படுத்துவோம்!

### சி.பி.ஐ. (எம்.எல்) ரெட்ஃபிளாக் 5-வது அனைத்திந்திய மாநாட்டில் தோழர் நீண்டபயணம் சுந்தரம் ஆற்றிய உரை!

மாநாட்டின் தலைமைத் தோழர்களே!
கட்சியின் மத்தியத் தலைமைத் தாழர்களே!
பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதித் தோழர்களே!

உங்கள் அனைவருக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், சி.பி.ஐ. (எம்.எல்) ரெட்ஃபிளாக் தமிழ்நாடு குழுவின் சார்பிலும் வணக்கத்தையும், புரட்சி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் பேச வரும்போது கன்னடத் தோழர்கள் கன்னடத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டார்கள். நான் கன்னடக்காரன் என்பதினால் அவர்கள் அப்படிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் நான் கடந்த 50 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இந்தக் காலங்களில் கன்னடத்தில் பேசுவதற்கான தொடர்புகளே இல்லாமல் போய்விட்டது. இப்போது நான் தமிழனாக இருக்கிறேன். தமிழில்தான் பேச முடியும். கன்னடத்தில் பேச முடியாமைக்கு எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டுக்கு வந்திருக்கும் தமிழ்நாட்டு பிரதிநிதித் தோழர்கள் என்னை ‘இளைஞர்’ என்றும் ‘இளைஞர் அணி’ என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இளைய தோழர்களோடு சேர்ந்து நான் செயல்பட்டுக் கொண்டிருப்பதனால் இப்படி சொல்லுகிறார்கள். என் பெயரில் இருக்கும் பற்றின் காரணமாகவும், தோழமை, பாசத்தின் காரணமாகவும் இப்படி சொல்லுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் இப்படிச் சொல்லும் போது எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஆயினும், இதற்கு இன்னொரு அர்த்தம் இருக்கிறது. முதியவர்கள் பயனற்றவர்கள். எனவே நீங்கள் புதியவர்களோடு வந்து விடுங்கள். இளைஞர் ஆகிவிடுங்கள் என்பதே இன்னொரு அர்த்தமாக இருக்கிறது.

இது மிகத் தவறானதாகும். முதுமை பயனற்றது அல்ல. முதுமையே முழுமையானதாகும். நான் இப்போது மிகச் சரியானதை விதைத்து, மிகச் சரியானதையே விளைவிக்க முடியும் என்பதை உறுதிக் கூறுகிறேன். நான் கனிந்த கனியாக இருக்கிறேன். கனிகள் தான் விதைகளைத் தரமுடியும். நான் காயாக முடியாது பிஞ்சாகவும் முடியாது. அவைகளிலிருக்கும் விதைகள் முளை விடாது. எனவே நீங்கள் வளமாக வளர்ந்து, முழுமை பெற்று, கனிந்து விதையாக வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இளைஞர்களாகிய உங்களோடு வந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் பூவில் கருகி விடாமல் காயில் வெம்பி கனிந்து உதிர்ந்து விடாமல் இருக்கவும். முதுமையின் முழுமையையும் அதன் பயனையும் உங்களுக்கு உணர்த்துவதற்காக உங்களோடு தோழமை பூண்டு வந்துக் கொண்டிருக்கிறேன்.

முதியவர்களின் முதிர்ந்த அறிவையும், நடுவயதினரின் நெஞ்சுறுதியையும், இளைஞர்களின் வேகத்தையும், குழந்தைகளின் உள்ளத்தையும் எனக்குத் தா என்று நமது மகாகவி பாரதியார் கடவுளை வேண்டினார். அவர் கடவுளைக் கேட்டார். நமது ஆசான்கள் நமக்கு இதை கட்டளையாகப் பிறப்பித்திருக்கிறார்கள்.

நமது தோழர்கள் இதை எந்த அளவுக்கு புரிந்துக் கொண்டிருக்கிறார்கள்? எந்த அளவிலே பின்பற்றுகிறார்கள் என்பதை என்னால் சொல்ல முடியாமல் இருக்கிறது. புரிந்துக் கொள்வதிலும், பின்பற்றுவதிலும் குறைபாடுகள் நேர்ந் திருப்பதாக கருதுகிறேன். தோழர்களைக் குறை கூறுவதற்காக இதை சொல்லவில்லை. நமது வரலாற்றுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பை எடுத்துக் காட்டவே இதை சொல்லுகிறேன்.

உலகத்தில் நமக்கு 150 ஆண்டு கால வர்க்கப் போராட்ட வரலாறு இருக்கிறது. இது இதற்கு முன் உலகம் கண்டும் கேட்டும் இராத வீரம் செறிந்த போரட்டங்களின் வரலாறாக இருக்கிறது. இந்த போராட்டங்கள் ஒன்றிலிருந்து இன்னொன்று பரிணாம ரீதியாக வளர்ச்சிப் பெற்று வந்திருக்கும் போராட்டங்களின் வரலாறாக இருக்கிறது.

குருச்சேவ் திரிபுவாத கும்பல் கட்சியை முதலாளித்துவப் பாதைக்கு மாற்றியது. அதை எதிர்த்து சர்வதேசங்களில் உருவான இளைய



படிப்பகம்

www.padippakam.com

தலைமுறை கம்யூனிஸ்டுகளை லின்பியோவ் தோழர் மாவோவின் வழிகாட்டுதல்களிலிருந்து விலக்கி சிறு முதலாளித்துவப் போக்குகளுக்கும் உணர்வு நிலைக்கும் உட்படுத்தினார்.

இதனால் இளைய தலைமுறையின் எழுச்சி வேகம் நமது நீண்ட கால வர்க்க போராட்ட வரலாற்றிலிருந்து முற்றிலும் துண்டித்துக் கொண்ட ஒரு புதிய கம்யூனிஸ்ட் கட்சியை தோற்றுவித்தது. இதன் ஒரு பகுதியாகவும், தொடர்ச்சியாகவும் தான் நமது நாட்டில் சி.பி.ஐ. (எம்.எல்) கட்சி உருவானது. இதன் விளைவாக பழைய வரலாற்றின் சத்தையும் சாரத்தையும் நாம் இழந்தவர்களாகி விட்டோம். இது நமது வரலாற்றுக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பாகும்.

பின்னர் தத்துவம் தெரியாதவர்கள், தத்துவப் போராட்டம் என்ற பெயரில் கட்சியை உடைத்து, துண்டு துண்டாக்கி, சிறு சிறு குழுக்களாக்கி விட்டனர்.

இந்தக் குழுக்கள் சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி என்பதற்கு பதில் சிறு முதலாளித்துவ உணர்வு நிலையிலான ஆயுதப் போராட்டக் குழுக்களாகவும் சாதியவாத - இனவாதக் குழுக்களாகவும் இருந்து வருவதைக் காண்கிறோம். இந்த நிலை இன்று சர்வதேசங்களிலும் இருந்து வருகிறது. இது இன்று எந்த ஒரு நாட்டிலும் சரியான ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உருவாக முடியாமல் செய்துக் கொண்டிருக்கிறது.

இத்தகைய ஒரு மோசமான காலத்தில், நெருக்கடிகளும், சிக்கல்களும், பெரும் பாதிப்புகளும், பின்னடைவுகளும் ஏற் பட்டிருக்கும் நிலையில் இதன் இடிபாடுகளிலிருந்து ஒரு புதிய கம்யூனிஸ்ட் கட்சியை 150 ஆண்டுகளின் வரலாற்றுத் தொடர்ச்சியாகவும், மூன்றாவது அகிலத்தின் பாதையிலும் நமது சி.பி.ஐ. (எம்.எல்) ரெட்ஃபிளாக் கட்சியை உருவாக்கியிருப்பதற்காகவும், இதற்கான கடும் உழைப்புக்காகவும் நமது கட்சியின் தலைமைக்கு நாம் அனைவரும் வெகுவாக கடமைப் பட்டுள்ளோம். (உற்சாகம் மிகுந்த கைத்தட்டல்) இப்போது நாம் நிமிர்ந்து நடக்கத் தொடங்கி இருக்கிறோம். நமது பாதை சரியானது என்பதை மூன்றாவது அகிலத்தின் வெளிச்சம் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. (மீண்டும் கைத்தட்டல்).

இந்த திசையிலும், இந்த வெளிச்சத்திலும், இந்த கண்ணோட்டத்திலும் நமது கட்சியின் 5 வது அனைத்திந்திய மாநாடு நடந்துக் கொண்டிருக்கிறது. முதல் மாநாட்டைத் தவிர மற்ற நான்கு மாநாடுகளிலும் நான் பங்கேற்று வருகிறேன். கடந்த முதல் இரண்டு நாட்கள் கட்சி திட்டத்தின் மீது விவாதங்கள் நடைபெற்றன. பிரதிநிதித் தோழர்கள் ஆழமான கருத்துக் களையும், திருத்தங்களையும் சமர்ப்பித்தார்கள். நேற்று அது இறுதியாக்கப்பட்டது.

கடந்த மூன்று மாநாடுகளில் இடம் பெற்ற ஆவணங்களை விட இந்த மாநாட்டில் இடம் பெற்ற ஆவணங்கள் ஆழமானதாகவும், நமது திசை வழியை மேலும் தெளிவு படுத்துவதாகவும், உறுதிப் படுத்துவதாகவும் நமது கண்ணோட்டத்தை மேலும் விரிவுபடுத்து வதாகவும் இருக்கிறது. இது மாநாட்டிலிருந்து மாநாட்டிற்கு படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்ததைப் பார்க்கிறோம்.

புரட்சியின் காலம் வரை இதுவே இறுதியானதாக இருக்க முடியாது. இருக்க வேண்டும் என்று கூறப்படுமானால் அது கருத்து முதல்வாதமாகும். அதே சமயம் இந்த அடிப்படையிலிருந்து நாம் வெகுவாக முன்னேற வேண்டி இருக்கிறது. இறுதிப் போருக்கான வளர்ச்சியைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த வகையில் தோழர்களின் அரசியல் உணர்வுகள், தெளிவு, வர்க்கப் போராட்ட பார்வையும், பொறுப்புணர்வுகளும் வெகுவாக வளர்ந்து வந்திருப்பதை இந்த மாநாட்டு விவாதங்கள் புலப்படுத்துகின்றன. நமது மாநில மாநாட்டின் விவாதங்களின் போதும் இதைப் பார்க்க முடிந்தது. இதற்காக தோழர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உலக ஏகாதிபத்தியங்களுக்கும், உலக மக்களுக்குமான முரண்பாட்டில் ஏகாதி பத்தியங்களை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கும் உலக மக்களோடு நமது மக்களையும் அணி திரட்டுவதற்கான தெளிவான பாதையை நாம் இந்த மாநாட்டில் வகுத்திருக்கிறோம். இந்தப் பாதையில் நாம் வீர நடை போடுவோம். இதுதான் எதிர்காலத்தில் வரலாறாக இருக்கும். (நீண்ட, பலத்த கரகோஷம்)

தோழர்களே! உங்கள் கைத்தட்டல்கள் எனக்கு உற்சாக மூட்டுவதாக இருக்கிறது. பெரிதும் மகிழ்ச்சி ஊட்டுவதாக இருக்கிறது. பிரதிநிதித் தோழர்கள் அனைவருக்கும் இது உற்சாகத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. எதிர்காலத்தைப் பற்றி வெகுவாக நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது. இளைஞர்களே எதிர்காலம் உங்களுடையது என்று தோழர் மாவோ சொல்லியிருப்பதை நினைவூட்டுவதாக இருக்கிறது. உங்களுக்கு நன்றி. இனி தேர்தலைப் பற்றி நமது கண்ணோட்டத்தை பார்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

## கட்சிக்குள் விமர்சன, சுயவிமர்சனங்களை வளர்ப்போம்! குப்பைகள் சேராமல் கட்சியை சுத்தப்படுத்திக் கொண்டே இருப்போம் !

நமது கட்சியின் அரசியல் அமைப்பு அறிக்கையின் மீது இப்போது விவாதங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம். கட்சியின் அகில இந்திய செயலாளர் தோழர் **K.N.** இராமச்சந்திரன் அவர்கள் நேற்று இந்த அறிக்கையை சமர்ப்பித்து சுருக்கமாக பேசினார்.

அவர் பேச்சு கட்சியின் திசை வழியை மேலும் செம்மைப் படுத்துவதாகவும், உறுதிப்படுத்துவதாகவும் இருந்தது. அவருடைய இந்தப் பேச்சு எனக்கு பெரிதும் மகிழ்ச்சியை உண்டாக்கியது. எனவே அவர் பேசி முடித்ததும் நான் எழுந்து சென்று மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டேன்.

அந்த அறிக்கையின் மீதும் அவர் விளக்கத்தின் மீதும் மேலும் சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது அகிலம் கலைக்கப்பட்டதை பற்றியும், அதன் விளைவுகளைப் பற்றியும் தோழர் **KNR** அவர்கள் குறிப்பிட்டார். அதே சமயம் மூன்றாவது அகிலம் கலைக்கப்படுவதற்கான சூழ்நிலைமைகள் பற்றியும், அதற்கான பின் விளைவுகளையும் நமது ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

இது போல் சீனக் கலாச்சாரப் புரட்சி பற்றியும் தோழர்கள் நால்வர் குழுவை புற்றியும், தோழர் மாவோ வழி காட்டுதல்களை அவர்கள் பிழையின்றி பின்பற்றினார்களா என்பதைப் பற்றியும் நாம் மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே சமயம் மிக நெருக்கடி மிகுந்த ஒரு காலத்தை உலகம் கடந்து கொண்டிருக்கும் நிலையில் ஒரு சரியான கம்யூனிஸ்டுக் கட்சியை உருவாக்குவதில் நமது தலைமை தோழர்களின் இடைவிடாத முயற்சியை நாம் மிக உயர்வாக மதிப்பீடு செய்கிறோம்.

ஆனால் கட்சியின் நடைமுறை பணிகளிலும் அமைப்பு விதிகளைப் பின்பற்றுவதிலும், ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை மேற்கொள்ளுவதிலும், மிகுந்த பலவீனங்களும், குறைபாடுகளும், பயிற்சி யின்மையும் இருந்து வருகின்றன. அவைகள் தொடர்ந்து வந்து கொண்டி ருக்கின்றன. அதனால் கட்சியின் வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை விமர்ச னங்களாக இங்கே முன் வைக்க விரும்புகிறேன். தோழர்கள் சிலர் இத்தகைய விமர்சனங்களை இங்கே ஒளிவு மறைவில்லாமல் முன் வைத்திருக்கிறார்கள். இது இதற்கு முந்தைய மாநாடுகளிலும், கட்சி அமைப்புகளிலும் இல்லாதவைகளாக இருந்தன. இது நமது கட்சியின் வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாக தெரிகிறது. இது போல் நான் இங்கு முன் வைக்கும் விமர்சனங்களைப் பார்க்க வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டும், இரண்டும் நான்கு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் நான்கில் இரண்டைக் காணோம் என்பது புரிந்து கொள்ள முடியாததாக இருக்கிறது. இது புரிந்தாக வேண்டும். இதற்கு தீர்வு காண வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் தமது கொள்கைகளை மூடி மறைப்பதில்லை என்று நமது பேராசன்களான மார்க்சும் ஏங்கல்சும் கம்யூனிஸ்டு அறிக்கையில் கூறியுள்ளனர். கட்சிக்கு உண்மைகள் தேவைப்படுகிறது. மிக சரியான உண்மைகள் தேவைப்படுகிறது. கடந்த காலங்களிலிருந்து நாம் உண்மைகளைத் தேடி அடைகின்றோம். எதிர்காலத்திற்கான உண்மை களை நாம் படைக்க வேண்டிய வர்களாக இருக்கின்றோம். எனவே நமது மதிப்பீடுகள் மிகச் சரியாக இருக்க வேண்டும்.

ஆனால் நமது தலைமைத் தோழர்கள் ஐம்பதை ஐந்து என்றும், ஐந்தை ஐம்பது என்றும் மதிப்பீடு செய்வதிலே பழக்கப்பட்டு இருக்கிறார்கள். (பலத்த சிரிப்பு) ஆரம்பத்தில் இது தவிர்க்க முடியாமல் இருந்திருக்கலாம். ஆயினும் மிகைப்படுத்தலும் குறைத்துக் கூறலும் நல்ல விளைவுகளை ஏற்படுத்தாது, இதற்கு தீர்வு கண்டாக வேண்டும்.

எனக்கு அரசியல் போதித்த எனது ஆசான் தோழர் **A.S.K** அய்யங்கார் அவர்கள் கட்சியின் தோழர்கள் கட்சிக்கு முன்னால் நிர்வாணமாக நிற்க வேண்டும் என்று கூறினார். கட்சியிலும் மக்களிடமும் நாம் உண்மைகளையே பேசவேண்டும் என்று அவர் போதித்தார்

இதைக் கூறும் போது வெகு நாட்களுக்கு முன் சீனப் பத்திரிகையில் வெளிவந்த சிரிப்புக்குரிய சின்னக்கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. கம்யூனிஸ்டு ஒருவரை போலிசார் பிடித்துச் சென்று கட்சியின் இரகசியங்களையெல்லாம் விசாரித்தார்கள். அந்த தோழர் அவருக்குத் தெரிந்த எல்லா ரகசியங்களையும் அவர்களிடம் கூறிவிட்டார். கட்சியின் இரகசியங்களை ஏன் போலிசாரிடம் தெரிவித்தாய் என்று கட்சியில் கேட்ட போது 'பொய் சொல்லக் கூடாது; உண்மைகளையே பேச வேண்டும்' என்று கட்சியில் போதிக்கப்பட்டதாக அவர் கூறினார். (பலத்த சிரிப்பும் கை தட்டலும்) இத்தகைய உண்மைகளை நான் குறிப்பிடவில்லை. இது கட்சிக்கும், மக்களுக்கும் எதிரான உண்மைகள். நமக்கு கட்சிக்கும், மக்களுக்குமான உண்மைகள் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மைகளை ஆதாரமாக வைத்து நமது கட்சியின் அமைப்புக்குள் அனைத்து பிரச்சினைகள் பற்றியும் முழுமையான விவாதங்களை நடத்த வேண்டும். சுய விமர்சனங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

விமர்சனங்களும், சுய விமர்சனங்களும் இல்லாத கட்சி பெருக்காத வீடு என்று தோழர் மாவோ சொல்லுகிறார். நமது கட்சி பெருக்காத வீடாக இருக்க கூடாது. அது நோயை உண்டாக்கும். எனவே நாம் விமர்சன சுய விமர்சனங்களின் மூலம் கட்சியை சுத்தப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

நமது தலைமையின் மேல் இங்கே தோழர்கள் விமர்சனங்களை வைத்தார்கள். அவர்களைப் பாராட்டுகிறேன். ஆயினும் தோழர்கள் இதில் போதுமான பயிற்சி அற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை பார்க்க முடிந்தது. விமர்சனங்கள் செய்யவும், அதை செவிமடுத்துக் கேட்கவும், சுய விமர்சனங்களை செய்து கொள்ளவும் மிகுந்த பயிற்சியும், பக்குவமும் தேவைப்படுகிறது. அதை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று தோழர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தயவு தாட்சயண்யமற்ற விமர் சனங்களும், கட்சி பணிகளில் தோழமையும் என்பதே நமது ஆசான்கள் நமக்கு கற்றுக் கொடுத்த சர்வதேச பாட்டாளி வர்க்க பண்பாடு. கட்சி பணிகளிலிருந்தும், பொறுப்பு உணர்வு களிலிருந்தும், மக்களின் போராட்ட அனுபவங்களிலிருந்தும் தான் இதை அதிகமாகப் பெறமுடியும் என்பதை இங்கு குறிப்பாக சொல்ல விரும்புகிறேன்.

மத்திய கண்ட்ரோல் கமிசன் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று இங்கே தோழர்கள் கேட்டுக் கொண்டார்கள். இதை ஏற்றுக் கொண்ட நமது செயலாளர் இப்போது இதற்கான சாத்தியப்பாடுகள் இல்லையென்று கூறினார். உண்மையில் இது இப்போது சாத்தியமில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

ஆயினும் நமது கட்சி உருவாகி பல்வேறு பிரச்சினைகளுக்கு இடையே செயல்பட வேண்டி இருந்திருக்கிறது. இதனால் நடைமுறை நடவடிக்கைகளில் சில தவறுகள் நடை பெற்றுள்ளன. அவைகள் தீர்வு காணப்படாமல் தேங்கிப்போய் உள்ளன.

எனவே மத்தியக் குழு உறுப்பினர்கள் மூன்று பேர்களைக் கொண்ட ஒரு தற்காலிக குழுவை அமைத்து கட்சி அமைப்புகளில் தேங்கிக் கிடக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், பிரச்சினைக்குரிய அமைப்புகளில் விசாரித்து ஒரு அறிக்கையைத் தயாரித்து மத்தியக் குழுவின் பரிசீனைக்கு அதை உட்படுத்தி, இறுதியாக்கி அணிகளுக்கு தரவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை இங்கே முன் மொழிகிறேன்.

இதன் மூலம் கட்சிக்கு ஏற்பட்ட குறைபாடுகள் மீண்டும் ஏற்படாத வகையில் தடுத்து, தேக்கத்தைப் போக்கி நிமிர்ந்து நடைபோட வைக்க முடியும் என்று கருதுகிறேன்

என் வயதின் காரணமாக இந்த மாநாட்டில் நான் அதிக சலுகைகளையும், உரிமைகளையும் பெற்றவனாக இருக்கிறேன். அதனால் எனக்கு அளிக்கப்பட்ட நேரத்தையும் கடந்து பேசிக் கொண்டிருக்கிறேன். இதை மேலும் அதிகம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

எனது பேச்சு தோழர்களின் மனதை எவ்விதத்திலும் புண்படுத்தியிருக்க முடியாது என்று நம்புகிறேன். அது எனது நோக்கமும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தோழர்கள் மேல் குறிப்பாக நமது மத்தியத் தலைமை தோழர்கள் மேல் நான் அளவு கடந்த மதிப்பும் மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனது வயதின் காரணமாக அடுத்த மாநாட்டுக்கு நான் வர முடியாமல் போகலாம். ஆயினும், என் வாழ்நாள் முழுவதும் கம்யூனிஸ்டாக இருப்பேன்; கம்யூனிஸ்டாக வாழ்வேன்; சி.பி.ஐ. (எம்.எல்) ரெட்ஃபிளாக்கில் உங்களோடு இருப்பேன்.

எனது பேச்சை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நமது மத்தியக் குழு தோழர் MM சோம சேகரன் அவர்களுக்கும், ஆங்கிலத்தில் இருந்து இந்திக்கு மொழி பெயர்த்த தோழர் உமா அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தோழர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். புரட்சி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

லால் சலாம்!



படிப்பகம்

www.padippakam.com



# செயலாளர் கடிதம்

அன்புள்ள தோழர்களே!

நமது செங்கொடி அமைப்பின் மாவட்ட, மாநில மாநாடுகளை ஓரளவு வெற்றிகரமாக நடத்தினோம். அகில இந்திய மாநாட்டில் தமிழ்நாட்டின் முழு அளவு பிரதிநிதிகளும் கலந்து கொண்டது பாராட்டுக்குரியது. அதே போல் மாநாட்டில் தமிழ் நாட்டு பிரதிநிதித் தோழர்கள் கருத்தியல் - அரசியல் தளத்தில் பெரும் அளவு விவாதங்களில் ஈடுபட்டு தமது பங்களிப்பை செலுத்தியது உற்சாகமும் மகிழ்ச்சியும் அளித்தது. மாநாட்டில் உலகமயமாக்களையும் பாசிச மதமயமாக்கலையும் எதிர்ப்பதை திசைவழியாகக் கொண்ட கட்சி திட்டத்தை நாம் நிறைவேற்றியுள்ளோம். மேலும் அகில இந்திய மாநாட்டில் இ.க.க (மா.லெ) செங்கொடி மார்க்சிய - லெனினிய அடிப்படையிலான சர்வதேசிய நிலைபாட்டை ஏற்றிருப்பதாலும், இன்றைய வளர்ச்சிக்கேற்ப திட்டம் ஒன்றை நிறைவேற்றியிருப்பதாலும் தன்னை பாட்டாளி வர்க்கத்தின் முன்னணி படை அமைப்பு என்பதாக அறிவித்துக் கொண்டது. கட்சி அமைப்பு விதியிலும் இணைத்துக் கொண்டது. ஆனால் நடைமுறையில் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணி படையாக நாம் இருப்பதற்கு கட்சி தலைமையும் அணிகளும் கடுமையாக பாடுபட உறுதி ஏற்க வேண்டியுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கட்சி அமைப்பை சீரமைத்தல், வர்க்க- வெகுஜன அமைப்புகளை கட்டுதல், மக்கள் மத்தியில் பாட்டாளி வர்க்க அரசியல் பிரச்சாரத்தை நடத்துதல், வெளியீடுகள், பத்திரிகைகள் கொண்டுவருதல் போன்ற கடமைகள் எதிர்கொள்வதை நாம் அனைவரும் அறிவோம். நமது அமைப்பு சிறியது தான். ஆனால் ஒன்றுபட்டு, உணர்வு பூர்வமாக பணிபுரிந்தால் எந்த பிரச்சினையையும் நம்மால் கடக்க முடியும்.

தமிழகம் ஒரு தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. பாசபறவை பெரியண்ணன் கருணாநிதியிடமிருந்து பாசமலர் தங்கை ஜெயலலிதாவுக்கு அக்னி குமாரன் இராமதாஸ் தாவியதன் காரணமாக முதலாளிய கட்சிகளின் குடும்பத்தில் மாபெரும் குழப்பம் நிலவுகிறது. சினிமாவில் தான் குடும்ப செண்டிமெண்ட் என்றால் அரசியலிலும் குடும்ப செண்டிமெண்ட் தான். கூட்டணி குறித்து மூப்பனார் மூச்சுக் கூட விடுவதில்லை. சி.பி.ஐ, சி.பி.எம் போன்றோர் குறைவான சிட்டுக்கள் தான் கிடைக்கும் என்ற கவலையில் ஆழ்ந்து போயுள்ளார்கள். தங்களது 'தேசிய' அந்தஸ்தையும், மாநில ஆட்சிகளையும் தக்கவைத்துக்கொள்ள படாதபாடு படுகிறார்கள்.

தமிழ்நாட்டு அரசியல் கருணாநிதி - ஜெயலலிதா என்பதையே சுற்றி வருகிறது. இது மட்டுமல்ல, மதச்சார்பு - மதச் சார்பற்றது என்ற நிலை பாட்டை மட்டும் சுற்றி வருகிறது. எத்தகைய பொருளாதார பிரச்சினையும் அடிப்படையாகக் கொள்ளப்படுவதில்லை. வர்க்க பிரச்சினைகளும், மக்கள் பிரச்சினைகளும் பின்தள்ளப்பட்டு, பொருளாதார நிலைமைகள் மறைக்கப்பட்டு, வாரிசு அரசியலும், சாதிய அரசியலும், நெறிகளற்ற சந்தர்ப்பவாத பதவி சுக அரசியலும் கொடிகட்டிப்பறக்கிறது.

இத்தகையதொரு பிற்போக்கு சூழலில் கடந்த முறை நடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் பேலவே ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக மாற்றுடன் இத்தேர்தலை நாம் சந்திக்க வேண்டும். பாட்டாளி வர்க்க அரசியல் நிலைபாட்டுடன் ஆளும் வர்க்க கட்சிகளின் ஏகாதிபத்திய அதரவு, தரகு முதலாளிய ஆதரவு, நிலப்பிரபுத்துவ ஆதரவு அரசியலை எதிர் கொள்ள வேண்டும்.

சமீப காலங்களில் இடது சாரிகள் தங்களுக்குள் ஆயுதப் போராட்டம் நடத்துகிறார்கள். சி.பி.எம், மக்கள் யுத்தத்தை கொல்லுகிறது. மக்கள் யுத்தத்துக்கும், எம்.சி.சி.-க்கும், லிபரேசனுக்கும் இடையில் ஆயுத மோதல் நடக்கிறது. கம்யூனிஸ்ட் இயக்கம் வர்க்க சமரசம், வர்க்க குரோதம் என்ற கடைக்கோடி நிலைகளிலேயே வாழ்ந்து வருகிறது. நாம் வர்க்கப் போராட்டத்தை நிகழ்ச்சி நிரலில் வைக்க வேண்டும். இன்று இடதுசாரிகளுக்குள் ஒரு கருத்தியல் போராட்டம் ஆரோக்கியமாகவும், தோழமையாகவும் நடத்த வேண்டிய தேவை உள்ளது. இந்தியாவில் ஒரு புரட்சிகர கட்சி, விஞ்ஞான பூர்வ திட்டம், நாடு தழுவிய மக்கள் திரள் இயக்கம் போன்றவற்றை சாதிக்க வேண்டியுள்ளது. இந்த திசையில் சென்றால் நாம் எதிரியை வெல்வோம். இல்லையெனில் இன்னும் பெரிய பின்னடைவில் சிக்கிக் கொள்வோம். தன்னுடன் போராடி புற நிலையை மாற்ற மார்க்சியம் ஆணையிடுகிறது. கம்யூனிஸ்ட் இயக்கத்தை அதனுள் சீரமைக்க செங்கொடி உறுதி பூண்டுள்ளது. இதை நிறைவேற்ற உழைப்போமாக.

புரட்சிகர வணக்கங்களுடன்.

இல. கோவிந்தசாமி
(செயலாளர்)
இ.க.க. (மா.லெ)
செங்கொடி
தமிழ்நாடு

செங்கொடி செய்தி :- தொடர்புக்கு.....
இல. கோவிந்தசாமி, 9. A. திருப்பெருமாள் நகர், கொளப்பாக்கம், சென்னை - 602 101
தொலைபேசி (PP) 4828482
E.MAIL:- ELGEYES 2001 @ Yahoo.Com.

படிப்பகம்